# நெல்லை கிழக்கு - மத்திய மாவட்ட - மாநகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

நெல்லை.டிச..29.

நெல்லை கிழக்கு மாவட்டம், நெல்லை மத்திய மாவட்டம்,மாநகர் மாவட்டம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நெல்லை கிழக்கு,மத்திய மாவட்டம், மாநகரம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாநகராட்சி வர்த்தக மையத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று பேசியதாவது.

திருச்சியில் மிகப்பெரிய கூட்டத்தை நடத்தியுள்ளோம். அதேபோன்று நெல்லையிலும் சிறப்பான கூட்டம் நடைபெறுகிறது.

உங்களில் ஒருவனாக இருந்து நான் செயல்படுவேன். ஒவ்வொன்றையும் என்னுடைய தலையாய கடமையாக எடுத்து உதவி செய்வேன். கழக குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுப்பேன். கடந்த சட்டமன்றத் தேர்தலில் 3 தொகுதியில் வெற்றி பெற்றோம். வரும் தேர்தலில் 5 தொகுதிகளில் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் யாரை கையை காட்டுகிறார்களோ அவர்களை வெற்றி பெறச் செய்வோம்.அதற்கு சாட்சியாக இந்த கூட்டம்.

30 ஆம் தேதி அய்யன் திருவள்ளுவர் வெள்ளி விழாவிற்காக கன்னியாகுமரிக்கு வரும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களை நெல்லை மாவட்டத்தின் சார்பில் பாளை கே.டி.சி. நகர் பகுதியில் 10,000 பேர்களுடனும், நாங்குநேரியில் 10,000 ம் பேர்களுடனும்,வள்ளியூரில் 10,000 ம் பேர்களுடனும் சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும்.தி.மு.க.வை ஒழித்து காட்ட வேண்டும் என்று கூறி சாட்டையால் அடிப்பதும்,செருப்பு அணிய மாட்டேன் என்று சொல்லி கூறிக்கொண்டு செயல்பட்டாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. எதுவும் எடுபடாது.

மீண்டும் தளபதி அவர்கள் தான் முதலமைச்சராக வருவார்கள்.அந்த தெம்பையும்,இறுமாப்பையும் காட்டவே இந்த கூட்டம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மேயர் ராமகிருஷ்ணன்,மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜம் ஜான்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், முத்துச் செல்வி, சிவராஜ்,சுரேஷ் ராஜன்,செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், ஞான திரவியம், சித்திக், பேச்சிபாண்டியன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் கனகராஜ்,சரவணன், ராமச்சந்திரன், பரமசிவ ஐயப்பன், நடராஜன்,ராஜ்,

ஒன்றிய செயலாளர்கள் தங்கப்பாண்டியன்,போர்வெல் கணேசன்,ராஜன், ஆரோக்கிய எட்வின்,செல்வகருணாநிதி, கண்ணன், ஜெகதீஷ்,ஜோசப்பெல்சி, மாரியப்பன்,அன்பழகன், அருள்மணி, பரணி சேகர, சுடலை கண்ணு,ராஜா ஞான திரவியம், முத்துப் பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், நகர செயலாளர்கள் கணேசன்,மணி சூரியன், பிரபாகர பாண்டியன்,

மேலச்செவல் பேரூராட்சி தலைவர் அன்னபூரணி, மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல்,நம்பி, தமயந்தி,சுரேஷ்,தர்மன், கிரிஜா குமார், பகுதி செயலாளர்கள் சுப்பரமணியின், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை,முன்னாள் துணை செயலாளர் ஆ.க. மணி, அணி அமைப்பாளர்கள் அலெக்ஸ் அப்பாவு, மல்லிகா அருள், அனிதா, சௌந்தரமுத்துராஜ், கருப்பசாமி கோட்டையப்பன், வில்சன் மணித்துரை, பிரேம், கருப்பசாமி என்ற செல்வம், பொன்னையா பாண்டியன், மகேஸ்வரி, உள்பட பேரூர் கழக, கிளை கழக, வட்டக்கழக செயலாளர்கள், மாநகர, உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி களின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.





நெல்லை கிழக்கு,மத்திய மாவட்டம் மாநகரம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாநகராட்சி வர்த்தக மையத்தில் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மாநகர செயலாளர் சுப்பிரமணியன், அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் ராஜன், வசந்தம் ஜெயக்குமார், சிவராஜ், முத்துசெல்வி, உள்பட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

## அரக்கோணம் சாலை விபத்தில் உயிரிழந்த

# பாதுகாப்புப் பிரிவு ஹவில்தார் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.29-**

**இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம், பின்னாவரம் கிராமம், காஞ்சிபுரம் - அரக்கோணம் சாலையில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்த உள்வட்டப் பாதுகாப்பு பிரிவு ஹவில்தார் எல். செந்தில்வேல் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அது வருமாறு:-

உள்வட்டப் பாதுகாப்புப் பிரிவில் ஹவில்தாராகப் பணிபுரிந்து வந்த எல்.செந்தில்வேல் 27.12.2024 அன்று அதிகாலை பணியின் நிமித்தமாக இருசக்கர வாகனத்தில் காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் சென்றுகொண்டிருந்த போது இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், பின்னாவரம் கிராமம், ஆட்டுப்பாக்கம் இரயில்வே கேட் எதிரில் அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில் ஹவில்தார் எல். செந்தில்வேல் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உள்வட்டப் பாதுகாப்புப் பிரிவு ஹவில்தார் எல்.செந்தில்வேல் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

எல்.செந்தில்வேல் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## பொள்ளாச்சி சம்பவத்தை மூடி மறைத்தவர்கள் கடந்த ஆட்சியினர்!

# பாலியல் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்!

## புதுக்கோட்டையில் - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச.29-

பொள்ளாச்சி பாலியல் சம்பவத்தை மூடி மறைத்தவர்கள் எல்லாம் இன்றைக்குப் பேசுவதா என்றும், பாலியல் குற்றவாளிகள் கடுமையான சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு இந்த ஆட்சியில் தண்டனைக் குட்படுத்துகிறார்கள் என்றும் புதுக்கோட்டையில் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பேட்டி வருமாறு:-

சாட்டையால் அடித்துக்கொள்வது என்பது ஒருவருக்கு கொடுக்கக்கூடிய தண்டனை அல்லது; பாவ விமோசனம். எனவே அண்ணாமலை செய்த தவறின் அடிப்படையில் பாவ விமோசனத்திற்காக சாட்டை அடித்துக் கொண்டாரா, அல்லது செய்த தவறுக்காக தனக்குத்தானே சாட்டையால் அடித்துக் கொண்டாரா? என்பதுதான் கேள்வியே தவிர, தி.மு.க. அரசு அவருக்கு எந்த பாதகமும் செய்யவில்லை.

பாரதிய ஜனதா கட்சியில் பழனி பாதயாத்திரை செல்வதற்காக 40 நாள் செருப்பு போடாமல் இருப்பார்கள். அதை அண்ணாமலை கடைப்பிடித்து வருகிறார். ஆனால் தி.மு.க.வை அகற்றுவேன் என்று கூறினால், அவர் வாழ்நாள் முழுதும் செருப்பு அணிய முடியாது.

ஞானசேகரனுக்கும், தி.மு.க.வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று தெளிவுபடுத்தி விட்டோம். ஞானசேகரனுக்கும் எங்களது கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

**திருட்டுத்தனமாக வந்த நபர்!**

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சி.சி.டி.வி. ஒயர்கள் இருக்கா இல்லையா என்பது விசாரணையில் தெரிய வரும். அவர் எந்த வழியாக வந்தார் என்பது விசாரணையில் கண்டுபிடித்து விடுவோம். அப்போது நிர்பயா ஃபண்ட் எப்படி செலவு செய்யப்பட்டது என்பது தெரியவரும்.

எஃப்.ஐ.ஆர். காப்பி புகார் கொடுத்தவர்களிடம் ஒரு நகல் வழங்கப்படும்.அவர்கள்மூலமாகவோ கூட எஃப்.ஐ.ஆர். காப்பி வெளி வந்திருக்கலாம்.

எஃப்.ஐ.ஆர். காப்பியில் தரம் தாழ்ந்த வார்த்தைகள் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. அவ்வாறு காவல் துறையினர் எழுத மாட்டார்கள்.



அண்ணா பல்கலைக்கழக வளாகம் 250 ஏக்கர் பரப்பளவு கொண்டது. மிகப்பெரிய பகுதி. அதில் இரவு நேரத்தில் திருட்டுத்தனமாக வந்துள்ளார். இனிமேல் பாதுகாப்பை எவ்வாறு அதிகரிக்க வேண்டுமோ அதை நாங்கள் செய்வோம்.

ஞானசேகரன் ஏற்கனவே குற்றவாளி என்பது நேற்று தான் தெரிய வருகிறது. அவர் பல வழக்குகளில் குற்றவாளி. இனிமேல் தான் கண்டுபிடிக்க வேண்டும்.

ஞானசேகரன் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சி.சி.டி.வி. கேமராவில் உள்ள அவரது புகைப்படத்தை வைத்து விசாரணை நடைபெற்று வரும். எப்படி இருந்தாலும் ஞானசேகரன் அதிலிருந்து தப்பிக்க முடியாது. ஞானசேகரனை நாங்கள் காப்பாற்ற வேண்டிய அவசியம் கிடையாது. ஞானசேகரன் யார் என்று எங்களுக்குத் தெரியாது. அவர் கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லை.

**நீதிமன்றங்களில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு!**

கடந்த சில மாதங்களுக்குமுன்புநீதிமன்றத்தில் நடந்த சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றங்களில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதுபோன்று பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு போட வேண்டும் என்று சொன்னால், அதையும் ஆலோசித்து முடிவு செய்வோம். பொது இடங்களில் காவல் துறை ரோந்து மட்டும் இருக்குமே தவிர, எந்தெந்த இடங்களில் குற்றம் நடக்கும் என்று நம்மால் யூகிக்க முடியாது. குற்றம் நடத்த பிறகுதான் அந்த இடத்தை மையமாக வைத்து பாதுகாப்புப் போட முடியும்.

இரண்டு பேருக்கும் இடையே உள்ள பகைமையை வைத்து, அடித்துக்கொண்டு சாகிறார்கள் என்றால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும். உடனடியாக அவர்களை பிடித்து தண்டிக்க மட்டுமே முடியும். எங்களைப் பொறுத்தவரை குற்றவாளிகளுக்கு நாங்கள் உடந்தை இல்லை.

குற்றச் சம்பவங்கள் நடைபெற்ற பிறகு, நாங்கள் விசாரணை செய்கிறோம். அதில் ஏதும் பாரபட்சம் இருந்தால் கேளுங்கள்.

**பொள்ளாச்சி சம்பவத்தை மறைத்த அ.தி.மு.க. அரசு!**

பொள்ளாச்சி சம்பவத்தை அப்போதைய அரசாங்கம் மறைத்தது, ஆனால் நாங்கள் மறைக்கவில்லை. குற்றவாளியை கைது செய்துள்ளோம்.

பாலியல் குற்றங்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறையில் உள்ளது. ஆயுள் தண்டனை வரை அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பாலியல் குற்றங்களில் எந்தக் குற்றவாளியையும் தப்பிக்கப்படுவது கிடையாது. தமிழக அரசு தொடுக்கும் வழக்குகளில் நூற்றுக்கு 90 சதவீதம் வெற்றியடைகிறது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

## பெண்களுக்கு பல திட்டங்களைச் செயல்படுத்தும் கழக அரசு - அவர்களுக்கு எதிரான குற்றங்களைப் புறந்தள்ளுமா?

# பெண்கள் பாதுகாப்பும் - முன்னேற்றமும் ‘திராவிட மாடல்’ அரசுக்கு மிக முக்கியம்!

## தூத்துக்குடியில் அமைச்சர் பி.கீதா ஜீவன் பேட்டி!

தூத்துக்குடி, டிச.29-

பெண்கள் பாதுகாப்பும் முன்னேற்றமும் திராவிட மாடல் அரசாங்கத்திற்கு மிக முக்கியமானது என தூத்துக்குடியில் அமைச்சர் கீதாஜீவன் செய்தியாளர்கள் சந்திப்பின் போது கூறினார்.

அப்போது அவர் கூறியதாவது :-

கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தனக்கு நடந்த வன்கொடுமை தொடர்பாக தைரியமாகப் புகார் கூறிய மாணவிக்கு நன்றிகள், பாராட்டுகள்; ஏனென்றால், நேர்ந்த கொடுமை இனி யாருக்கும் நடக்கக் கூடாது என அவர் தைரியமாக புகார் அளித்ததற்கு பாராட்டுகள். இவ்வாறு பெண்கள் தைரியமாக புகாரளிக்க முன்வர வேண்டும். அப்படி வந்தால் தான், குற்றச் செயல்கள் நிகழாத வகையிலான நிலையை உருவாக்கித் தர முடியும்.



நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின், 27.11.2021 அன்று, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் குற்றச்செயல்கள் குறித்து சமூக நலத்துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல் இருக்க வேண்டும், குற்றச்செயல்கள் நடைபெற்று புகார் அளிக்கும்போது அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும் என அந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!**

பெற்றோர் தயங்கும் நேரத்தில் சமூக நலத்துறையே முன்வந்து புகார் கொடுத்து வழக்கையே சமூக நலத்துறை நடத்திட வேண்டும், குற்றவாளி களுக்கு விரைவாக தண்டனை பெற்று;j தர வேண்டும் என்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சாதகமான மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும்; அதற்கு ஏற்றார் போல் சமூக நலத்துறை, காவல்துறை, குழந்தைகள் மற்றும் சிறப்பு சேவைகள் துறை செயல்பட வேணடும் எனவும் அறிவுறுத்தினார். அன்றிலிருந்து ஒவ்வொரு மாதமும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்கள் கவனிக்கப்படுகிறதா எனவும், குற்றம் நடந்திருப்பின் முதல் தகவல் அறிக்கை முறையாக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா, குற்றவாளிக்கு தகுந்த தண்டனை கிடைந்துள்ளதா எனவும் முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

பெண்களுக்கான ஆட்சியாக இருக்க வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் நினைக்கிறார். அதனால்தான் மகளிர் விடியல் பயணம், மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கும் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பெண்களை தொழில் முனைவோராக்கும் திட்டம், கிராமத்தில் வீடு இல்லாதவர்களுக்கு பெண்கள் பெயரிலேயே பட்டா வழங்குவது, மகளிர் கடன் உதவி, மானிய கடன் வழங்குவது, சுழல்நிதி வழங்குவது, தொழில் தொடங்குவது என பெண்களுக்கான அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்.

அப்படியொரு ஆட்சியை நடத்தும் இந்த அரசு, பெண்களுக்கு எதிரான குற்றங்களை புறம்தள்ளுமா என்ற கேள்வியை நான் இங்கு முன் வைக்கிறேன். ஒரு சில வழக்குகளில் நிலவும் சூழல் அல்லது காவல் அதிகாரியின் கவனக் குறைவாலோ ஒரு தவறு நடந்தால் கூட அரசின் கவனத்திற்கு வரும்போது அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறிப்பாக அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்தவுடன், உடனடியாக அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நம்முடைய வளர் இளம் பெண்களுக்கு போக்சோ சட்டத்தில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் எனத் தெரியாமல் இருந்தது. இது குறித்து விழிப்புணர்வை, கல்வித்துறை, சமூக நலத்துறை, காவல்துறை இணைந்து அனைத்து பள்ளிகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளோம். இதனால் அவர்கள் தைரியமாக புகார் அளிக்க முடிகிறது. மேலும் புகார் கொடுக்கும் நபர்களின் விவரங்கள் ரகசியம் காக்கப்படும். இதன் காரணமாகத் தான், தாயாக இருந்தாலும் தங்களின் குழந்தைகளுக்கு நடந்ததை கூறி புகார் அளிக்க முன் வருகிறார்கள்.

**குற்றவாளிகளை பாதுகாத்த எடப்பாடி!**

அ.தி.மு.க. ஆட்சியில் எத்தனையோ குற்றச்செயல்கள் நடைபெற்றது. பொள்ளாச்சி குற்றநிகழ்வு ஒன்றே அந்த பொல்லாத ஆட்சிக்கு சான்று. வழக்கே தொடுக்கவில்லை, புகார் கொடுத்தவர்கள் மிரட்டப்பட்டா ர்கள்.

தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஆர்ப்பாட்டம், போராட்டம் என நடத்திய பின்னர் தான் மத்திய புலன் விசாரணை நடைபெற்றது. அ.தி.மு.க. நிர்வாகிகளே அந்த வழக்கில் சமந்தப்பட்டு இருந்தார்கள், கட்சிக்காரர்களை பாதுகாக்கும் வகையில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சி நடைபெற்றது. ஆனால் கிண்டி அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நேர்ந்த கொடுமை வழக்கில் 3 மணி நேரத்தில், சம்பந்தப்பட்டவர் கைது செய்யபட்டார். இனி அவருக்கு தகுந்த தண்டனை வாங்கித் தரப்படும் என்பதில் எந்தவொரு ஐயப்பாடுமில்லை. சென்னை மாநகரக் காவல் ஆணையரும் இந்தப் புகார் தொடர்பாக விளக்கம் அளித்துள்ளார்.

வெறும் வாயை மென்றுக் கொண்டிருந்த அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் இந்த ஒரு வழக்கு கிடைத்ததும் அவர்கள் தொடர்ந்து அறிக்கைகளை விட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

**தூத்துக்குடியின் துப்பாக்கி சூடு அ.தி.மு.க.வின் நிர்வாக சீர்க்கேடு!**

தூத்துக்குடி தூப்பாக்கி சூடு நடந்த சம்பவம் அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாக சீர்க்கேடு, அப்படி நிர்வாகம் செய்தவர் எல்லாம் நம்முடைய தளபதியின் ஆட்சியை கேள்வி கேட்கிறார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த அவலங்களை கூற நேரம் போதாது அப்படி ஆட்சியை எடப்பாடி பழனிசாமி நடத்தினார்.

பா.ஜ.க. தலைவரோ செய்தியாளர்களை அழைத்து வித்தை காண்பித்துக் கொண்டு இருக்கிறார். குழந்தைகளுக்கு வித்தை காண்பிப்பது போல கயிற்றால் அடித்து கொண்டு செய்தியாளர்களுக்கு வித்தை காண்பித்தார்.

குற்றச்செயல் செய்த ஞானசேகர் தி.மு.க. என கூறுகின்றனர். ஆனால் அவர் தி.மு.க.வை சேர்ந்தவர் இல்லை. சைதை பகுதி கழகத்தில் பொறுப்பில் இருப்பவர் டி.ஞானசேகர். அவர் வேறு என நாங்கள் எத்தனையோ முறை கூறிவிட்டோம்.

**அ.தி.மு.க ஆட்சியில் நடந்த பல்வேறு குற்றங்கள்!**

அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த பாலியல் குற்றங்கள் சிலவற்றை கூறுகிறேன்.

சென்னை போரூரில் 2017ல், 6 வயது சிறுமி வன்கொடுமை செய்து கொல்லப் பட்டார்.

மாமல்லபுரம் அருகே ஜெர்மன் நாட்டை சேர்ந்த பெண் ஒருவரை இருவர் மிரட்டி பாலியல்வன்கொடுமை.

காஞ்சிபுரத்தில் அணைக்கட்டில் பெண்ணை மிரட்டி கூட்டு பாலியல் வன்கொடுமை.

தூத்துக்குடியில் 14 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து எரித்துக் கொலை. இப்படி அடுக்கிக் கொண்டே போலாம். அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் திமுக ஆட்சியில் உடனடியாக அனைத்து வழக்குகளிலும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

பாதம் தாங்கி எடப்பாடி பழனிசாமி, கடந்த, 24ம் தேதி நடந்த நிகழ்வுக்கு 27ஆம் தேதி நான்கு மணிக்கு பேசுகிறார். அத்தனை விளக்கங் களும் கொடுத்த பிறகும் அதைப் பற்றியே மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.





உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் (போர்டு ஹை ஸ்கூல்) முள்செடி கொடிகள் மற்றும் பாதைகளில் மழைநீர் தேங்கி உடற்பயிற்சி செய்ய வரும் மாணவ மாணவிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையூறாக இருந்தது. இம்மைதானத்தின் அருகில் உள்ள சேதமடைந்த வில்லானி செல்லும் சாலை உள்ளிட்ட பகுதிகளில் தலைமை செயற்குழு உறுப்பினர் இளமகிழன் ஏற்பாட்டில் பணியாட்கள், ஜேசிபி இயந்திரம் மற்றும் லாரிகள் மூலம் மணல்களை கொண்டு பராமரிப்பு பணியினை துவக்கினார்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தங்கச்சிமடம் அருகே நாலுபண்ணையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடலில் மீன்பிடிக்கச் சென்ற முகிலன் என்கிற 18 வயது இளைஞர் ஆக்ஸிஜன் சிலிண்டர் வெடித்து உயிரிழந்த செய்தி அறிந்து இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. உயிரிழந்த மீனவரின் இல்லத்திற்கு நேரில் சென்று நிதியுதவி அளித்து ஆறுதல் தெரிவித்தார். மேலும் விரைவில் முதலைமைச்சர் நிதியில் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.